Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Vol. 69 அவர் முன்பாக நான் மனவுண்மையாயிருந்து, என் துர்க்குணத்திற்கு என்னை விலக்கிக் காத்துக் கொண்டேன். சங்.18:23 பிப்ரவரி 2023 No.2

மிஷனறி ஒருவர் ஒரு எழுப்புதலை நினைவுகூருகிறார்

A missionary recalls revival

R.A. Paulson

நான் இதனை ஏப்ரல் 19ம் நாள் 1945-ம் ஆண்டு ஆப்ரிக்காவிலுள்ள பிரெஞ்சு இக்வோடோரியாவிலிருந்து போருக்கு அழைப்பாக எழுதுகிறேன். நமது சேனை நன்கு பலப்படுத்தப் படாவிடில் சத்துருவாகிய சாத்தான் நம்மை மேற்கொண்டு விடுவான். மோசேயின் கரங்கள் ஜெபத்தால் தாங்கப்பட்ட போது, யோசுவாவும் அவனது படைவீரரும் அமலேக்கியரை மேற்கொண்டனர். ஆனால் பலவீன னான மோசேகளைத்து அவனது கரங்கள் தளர்ந்து கீழே வந்தபோது சத்துரு மேற்கொண்டான். அன்பு சகோதரர் களே, போர் நடந்து கொண்டிருக்கிறது.

நாங்கள் பணி செய்த கெம்பே என்ற பணித்தளத்தில் வல்லமையாக தூய ஆவியானவர் இறங்கினார். "மக்களில் தூய ஆவியானவர் இறங்கும் போது தீய ஆவிகள் அதைத் தடுக்க எழும்புவ துண்டு" என்று F.B. மேயர் கூறியுள்ளார். நம்மில் அனேகர் தூய ஆவியானவரைக் குறித்து அதிகமாக அறியாதபடியால், பிசாசைக் குறித்தும் அதிகமாக அறியாமலிருக்கிறோம். நீங்கள் தூய ஆவியின் வல்லமையோடு வாழ்வீர்களா னால் நரகம் முழுவதும் உங்களுக்கு எதிராயிருக்கும்.

நாங்கள் கெம்பேயில் காலடி எடுத்து வைத்தது முதல் பிசாசு போராடிக் கொண்டிருந்தான். ஏன் அவன் எங்களை சரீரபிரகாரமாகத் துன்புறுத்துகிறான் என்று அறியாதிருந்தோம். அவன் ஆவிக் குரியபடியும் எங்களைத் துன்புறுத்தி னான். இதனால் பல கிறிஸ்துவர்கள் ஐக்கி யத்தை விட்டு விலகி விட்டனர். அது புறஜாதியார் சந்தோஷப்பட ஏதுவாயிற்று.

ஆடுகளை மட்டுமல்ல, என்னைப் போன்ற மேய்ப்பர்களையும் அவன் விட்டு வைப்பதில்லை. நாம் ஆவிக்குரிய தாழ்வு நிலையில் இருந்தால் தோற்கடிக்கப்படுவோம். பாவம் நமக்குள் நகர்ந்து வந்து விடுகிறது. அவிசுவாசம், ஜெபக்குறைவு, தேவ வசனத்தை அசட்டை செய்தல், தேவ பணியின் நெருக்கத்தால் தேவ உறவை விட்டு விலகுதல் போன்றவை இவற்றி லடங்கும். இவை யாவும் அவிசுவாசத் தோடு தொடர்புடையவை. இது ஆண்டவரைக் கண்ணீர் விடச் செய் கிறது. இன்றும் தேவன் சபையைப் பார்த்து அது ஜெபத்திலும், வல்லமை யிலும் குறைவுபட்டுக் கொண்டே போவதால் கண்ணீர் விட்டுக் கொண் டிருக்கிறார்.

இந்த நிலை தொடராதபடி தேவன் காத்துக் கொள்கிறார். 1944-ம் ஆண்டு நடைபெற்ற மிஷனெறி மாநாட் டில் (காம்ப் பெல்) நான் மன்னிப்புக்காக தேவனிடம் கண்ணீர் விடச் செய்தார். நான் முழுமையான கீழ்ப்படிதலுடன் என்னை முழுமையாய் அவருக்கு அர்ப்பணித்தேன்.

இப்போது தேவ ஆவியானவரின் நிரப்புதலையும் அசைவாடுதலையும் பலப்படுத்துதலையும் என்னால் விவரிக்க முடியவில்லை. காம்ப் பெல் மிஷன் நிலையம் முழுவதும் தேவ பிரசன்னத் தால் நிரப்பப்பட்டது. அனேகர் சாட்சி கூற எழும்பினர். பெந்தேகோஸ்தே எப்படியிருந்திருக்கும் என்பதையும், பலவீனனான பேதுரு மற்றும் வல்லமை யற்ற சீடர்கள் எப்படி தைரியமடைந் தார்கள் என்றும் புரிந்து கொண்டேன்.

எங்கள் இருதயங்களைக் கர்த்தர் ஆட்சி செய்ய ஆரம்பித்தார். தமது ஆளுகையைக் கடைசி மட்டும் எங்கள் வாழ்வில் நடத்துவார் என்ற விசுவாசத் துடன் கெம்பே திரும்பினோம். இப்போது வேதபுத்தகம் ஜீவனுள்ள புத்தகமாக விளங்கியது. தேவ மகிமை அதிலிருந்து வெளிப்பட்டது. ஜெப ஆவி எங்களில் பெருகியது.

சபைக்கு இன்னும் அதிகமான போதனைகளும், பிரசங்கங்களும் தேவையில்லை. மகிமையின் தேவன் மக்களின் உள்ளங்களில் ஆளுகை செய்வதும், தூய ஆவியானவரின் வல்லமை அவர்களிலிருப்பதால் அவர்கள் சாட்சியாய் வெளிப்படுவதுமே தேவை என்பதை உணர்ந்தேன்.

தேவன் ஜெப பாரத்தை எனக்குத் தந்து, சரியான செய்தியினை மக்களுக்கு அளிக்க, அவரது ஆவியை என்னில் ஊற்றினார். அதன்படி விசுவாசி களில் காணப்பட்ட தாழ்வான ஆவிக் குரிய நிலை, விசுவாசக் குறைவு ஆகிய வற்றைக் குறித்துப் பேசினேன். நாங்கள் காம்ப் பெல் மாநாட்டில் எழுப்புதலைப் பெற்று இரு மாதங்களுக்குப் பிறகு தேவன் கிருபையாய் எங்களை ஆசீர் வதித்தார். நாங்கள் 23 பேர் கூடி ஜெபித்துக் கொண்டிருந்தோம். கூடுகை யை முடிக்க எத்தனித்த போது ஆவி யானவர் எங்கள் மேல் இறங்கி அசை வாடினார். விசுவாசிகள் அனைவரும் தரையில் முகங்குப்புற விழுந்தனர்.

அவர்கள் தங்கள் பாவங்களை புலம்பலோடும், வேதனையோடும், கண்ணீரோடும் அறிக்கையிட்டனர். ஆண்டவராகிய இயேசுவுக்கு நன்றி செலுத்தினர். தேவன் அவர்களது இருதயங்களைத் தொட்டார். ஜீவ தண்ணீருள்ள நதிகள் அவர்களது உள்ளங்களிலிருந்து புறப்பட்டது.

தேவ ஆவியானவரின் பலத்த கிரியை 3 மணி நேரம் தொடர்ந்தது. அந்த ஜெபக் கூடுகை ஆசீர்வாதமாயிருந்தது. கிராமவாசிகள் கூடிவந்து தங்களை தேவனுக்கு முன்பாகத் தாழ்த்தினர். இந்தக் கூடுகைக்குப் பின் அவர்கள் எங்கள் மிஷன் கிராமத்தில் கூடி தங்கள் சாட்சிகளைக் கூறி, பாடல்களைப் பாடி, இரவு முழுவதும் ஜெபித்தனர். அனேகர் புதுவாழ்வைப் பெற்றனர். சபை எழுப்பு தலடைந்தது. பின்மாறிப்போன அனேகர் தங்கள் தவறுகளை உணர்ந்து இரவு முழுவதும் கண்ணீர் விட்டனர். சபை மூப்பர்கள் ஜெப பாரத்தால் இரவு தூங்க வில்லை. ஜெபக் கூடுகைகள் அதிகரித் தன. ஜெபங்களுக்குப் பதில்கள் வந்தது. தூரமாகத் தென்பட்ட தேவன் இப்போது மிக சமீபமாக, அதாவது அவர்களது இருதயத்திற்குள்ளே வந்து விட்டார்.

ஒரு பேர் பெற்ற கல்லூரி ஆசிரியர் அதிகாலையில் மிக்க பாவ உணர்வுடன் ஜெபிக்க ஆரம்பித்தார். அப்போது அவர் அதிகமாக நடுங்கினார். அவரது மூங்கிலால் ஆன கட்டில் அசைந்தது. அவரது மனைவி அவரைப் பார்த்து, 'பலசாலியான மனுஷனாகிய நீர் இப்படி நடுங்கியதை நான் ஒரு போதும் பார்த்ததில்லையே' என ஆச்சரி யத்துடன்கூறினாள். அவர்பதிலாக,

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும் உங்கள் **பத்திரிகை பதிவு எண், தொலைபேசி எண்** இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

கடிதம், காணிக்கை, கொரியர்அனுப்ப வேண்டிய முகவரி :

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil - 629 001.
Mobile : 9543221008

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வாசகர் கடிதம்

Kancheepuram,
16/11/2022.

அன்பு சகோதரர்,

வெஸ்லி தேவதாசன் அவர்களுக்கும், தங்களுடன் பணிபுரியும் உடன் குழுவினருக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் என் அன்பு கனிந்த கிறிஸ்துமஸ் வாழ்த்தும் புத்தாண்டு வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் பத்திரிக்கை ஊழியம் எளிமையிலும் வலிமை உள்ளது. தங்களின் தகப்பனில் தொடங்கி தங்களின் தொடர் பத்திரிக்கையை மிகவும் விசுவாசத்துடன் பெற்று வருகிறேன். சுமார் (40) வருடங்களாக உமது பணி சிறக்க என் மனமார வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து பணிபுரிய ஆன்மா பெலத்தையும் உடல், உள்ள சுகத்தையும் கொடுக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறேன். என் கணவர்க்காகவும் எங்கள் குடும்பத்திற்காகவும் வேண்டிக் கொள்ள கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் என் சிறிய காணிக்கையை ரூ. 500/- இணைத்துள்ளேன் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு, கர்த்தருக்குள் சகோதரி, G.V.

கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும், கள்ளப் போதகர்களுக்கும் எச்சரிக்கையாயிருங்கள்

Beware of false prophets and false teachers

Rich Carmicheal

"அனேகக் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி அநேகரை வஞ்சிப்பார்கள்" மத். 24:11.

"ஏனெனில் கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ள தீர்க்கதரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்; இதோ முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்". மத். 24:24-25

"நான் போன பின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடம் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆகையால் நான் மூன்று வருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடு இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக் கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்" அப். 20:29-31.

இந்தக் கடைசி நாட்களில் கள்ளத் தீர்க்கர்களுக்கும், கள்ளப் போதகர்களுக்கும் எச்சரிக்கையுடன் விழித்திருக்கும்படி வேதவசனம் நம்மை எச்சரிக்கிறது. இந்தப் பகுத்தறிவு முக்கியமானது, ஏனெனில் பொய்யான தலைவர்கள் நம்மிடமிருந்துதான் எழும்புகிறார்கள். (அப். 20:30; 2 பேது. 2:1) அவர்கள்ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு வருவார்கள் (மத். 7:15) அவர்கள் பக்கவழியாய் நுழைவார்கள் (யூதா. 4) கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளை தந்திரமாய் நுழைப் பார்கள். 2 பேது. 2:1. தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங் களையும் செய்வார்கள் மத். 24:24. "அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே" 2 கொரி. 11:13-15.

கடைசி நாட்களில், "அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ள வர்களாகி தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாக சேர்த்துக் கொண்டு சத்தியத்திற்கு செவியை விலக்கி, கட்டுக் கதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும்" (2 தீமோ 4:3-4) என்பது ஆபத்தானது. இந்த நிலை எரேமியா காலத்திற்குச் சமமானது. "திகைத்துத் திடுக்கிடத் தக்க காரியம் தேசத்திலே நடந்து வருகிறது. தீர்க்கதரிசிகள் கள்ளத் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள்; இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது; ஆனாலும் முடிவிலே என்ன சொல்லுவீர்கள்?" எரேமி. 5:30,31. இன்று கூட அனேகர் சபைக் குள்ளே கள்ளப்போதகர்களை வரவேற்று உபசரித்து அவர்களது செய்திகளை வரவேற்கிறார்கள்.

ஆண்டவர் இத்தகைய கள்ளப் போதகர்கள், தீர்க்கர்கள், மேய்ப்பர்கள், அப்போஸ்தலர்கள் போன்றவர் களைக் குறித்து எச்சரிப்பது மட்டுமல்ல, அவர்களை எப்படி பிரித்தறிவது என்றும் தமது வசனத்தில் கூறியிருக்கிறார். இதற்கான ஏழு அடையாளங்களைக் கீழே படிக்கலாம்.

1. பொய்யான தலைவர்கள் மற்றவர்கள் தங்களுக்குச் சேவை செய்ய விரும்புவார்கள். ஆனால் உத்தம தலைவர்கள் பிறருக்கு சேவை செய்ய ஆவலாயிருப்பார்கள்:

இதைக் குறித்து இயேசு: ".....புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்து கிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் .....உங்களில் எவனாகிலும் முதன்மையாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" (மத். 20:25-28) தமது சீஷர்களின் கால்களைக் கழுகிய பின்பு இயேசு "ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" (யோவா. 13:14) என்று போதித்தார். தேவன் தலைவர்களுக்குக் கொடுக்கும் அதிகாரம் அவர்கள் பிறருக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதற்காகவே.

நேர்மையற்ற தலைவர்கள் அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தி தங்கள் ஆதாயத்துக்காகப் பிறரைக் கொள்ளை யிடுகிறார்கள். அவர்கள் பெருமளவில் தங்களுக்காகவே கவலைப்படுகிறார்கள். (யூதா.12) ".....இவர்களுடைய வாய் இறுமாப்பானவைகளைப் பேசும், தற்பொழிவுக்காக முகஸ்துதி செய்வார்கள்" (வச.16) எசேக்கியேலின் காலத்திலுள்ள கெட்ட மேய்ப்பர்களைப் போன்றவர்கள். (எசேக். 34:2-4 படிக்க)

ஒரு தலைவன் தன் காரியங்களுக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுத்தால் அவன் நல்ல தலைவனல்ல. உண்மையான தலைவன் தாழ்மையுள்ளவனும் பிறருடைய தேவைகளுக்கு அதிக கவனம் செலுத்துகிறவனுமாயிருக்க வேண்டும். "நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்." (யோவா. 10:11)

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்
உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்
Mobile : **95432 21008** Whatsapp : **9489740295**
e-mail:varukayinthoothan@hotmail.com

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(2-ம் பக்க தொடர்ச்சி)

2. பொய்யான தலைவர்கள் பணத்தின் மேல் கவனமாயிருப்பார்கள். உத்தம தலைவர்கள் ஊழியத்தில் நோக்கமாயிருப்பார்கள்.

ஒரு தலைவர் பணத்தின் மேல் குறியாயிருந்து உலகப்பொருளில் கவனம் வைத்து தெய்வ பயத்தினால் பொருளாதாரம் பெருகும் என்று போதித்தால் அவர் பொய்யான தலைவன். வேத வசனங்கள் இதனைக் கண்டித்தாலும் இந்தத் தவறான போதனை உலகெங்கும் பரவி இருக்கிறது. இதைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் கூறுவதை 1 தீமோ. 6:3-19 வசனங்களில் படியுங்கள்.

இதே பிரச்சனை பழைய ஏற் பாட்டின் காலத்திலும் காணப்பட்டிருப்பதை எரேமியா, மீகா, ஏசாயா ஆகியவற்றில் காணலாம். "அவர்களில் சிறியோர் முதல் பெரியோர் மட்டும் ஒவ்வொருவரும் பொருளாசைக்காரர்; இதுவுமல்லாமல், தீர்க்கதரிசிகள் முதல் ஆசாரியர்கள் மட்டும் ஒவ்வொருவரும் பொய்யர்"எரே. 6:13. "அதின் தலைவர்கள் பரிதானத்துக்கு நியாயந்தீர்க்கிறார்கள், அதின் ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள், அதின் தீர்க்கதரிசிகள் பணத்துக்குக் குறி சொல்லுகிறார்கள்". (மீகா. 3:11) "அவனுடைய காவற்காரர் ..... திருப்தியடையாமலிருக்கும் பெரு வயிற்று நாய்கள்; பகுத்தறிவில்லாத மேய்ப்பர், அவர்களில் ஒவ்வொருவனும் தன் தன் வழியையும், அவனவன் தன் தன் மூலையிலிருந்து தன்தன் பொழிவையும் நோக்கிக் கொண்டிருக்கிறான்". (ஏசா. 56:11)

ஆண்டவராகிய இயேசுவின் எச்சரிப்புகளைப் பார்ப்போம்: "பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" (லூக். 12:15) பொய்யான போதகர்களைக் குறித்து நாம் ஏன் எச்சரிக்கையாகயிருக்க வேண்டுமெனில், "அவர்கள், பொருளாசைகளில் பழகினவர்களாயிருக்கிறார்கள்". (2பேது.2:14) பொருளாசையுடையவர்களாய்,

(1-ம் பக்க தொடர்ச்சி)

"நான் இப்படியே இருக்கட்டும், தேவன் என்னோடு பேசுகிறார்" என்றார். அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனையில் அவர் தமது அனுபவத்தைக் கண்களில் கண்ணீரோடும், முகத்தில் மலர்ச்சியோடும் பகிர்ந்து கொண்டார்.

நாங்கள் கெம்பே எழுப்புதலை விட்டு விட்டுச் சென்றோம். ஆனால் அந்த எழுப்புதல் தொடர்ந்து பரவியது. **மனிதரால் ஏற்படும் அக்கினி அவிந்து போகலாம். ஆனால் தேவனால் பற்றிய அந்த அக்கினி தணியவில்லை.**

இன்று நமது மிகப்பெரிய தேவை உலக அளவிலான எழுப்புதல் ஒன்றே, அது வந்து கொண்டிருக்கிறது. நாம் நினைப்பதை விட அது மிக அருகிலுள்ளது. நாம் ஜெபித்து தேவனிடமிருந்து பதிலைப் பெறுவோம்.

நாம் முழங்கால் போரில் ஈடுபட்டிருக்கிறோம் நம்மோடு இணைந்து ஜெபிப்பது யார்?

தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்ளுவார்கள்; அவர்களது வஞ்சனை வேதவசனங்களைப் புரட்டுவதாயிருந்தாலும் முடிவும் நோக்கமும் பொருளாதாரத்தைப் பெருக்குவதே.

தெய்வீகத் தலைவராகிய அப் போஸ்தலனாகிய பவுலுக்கு இது எவ் வளவு எதிரிடையானது! (அப். 20:33-35 படிக்க) பவுல் இன்னும் எழுதுவதையும் பார்க்கலாம். "அனேகரைப் போல, நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும் தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில் பேசுகிறோம்" (2கொரி. 2:17) தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, தேவபயமுள்ள தலைவர்கள் பண ஆசையில்லாதவர்களாயிருக்க வேண்டுமென்றும் (1 தீமோ.3:3) "உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்" (1 தீமோ. 6:8) என்றும் எழுதுகிறார்.

3. பொய்யான தலைவர்கள் பாவத்தை மறைக்கிறார்கள்; உத்தம தலைவர்களோ மனந்திரும்புதலைப் பிரசங்கிக்கிறார்கள்:

தேவனால் அனுப்பப்பட்ட மனிதனுடைய செய்தியின் முழுமை மக்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி தேவனுக்கு நேராகச் செல்ல வேண்டும் என்பதாகும். மீகா தீர்க்கரின் காலத்தில் வாழ்ந்த பொய் தீர்க்கர்களும் ஆசாரியர்களும் நன்மையை வெறுத்து தீமையை விரும்பி மக்களை வழி தவறச் செய்தனர். எனவே "நானோ யாக்கோபுக்கு அவன் மீறுதலையும், இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன்" (மீகா3:8) என்று உரைத்தார். அனைத்து பழைய ஏற்பாட்டு தீர்க்கர்களும் மனந்திரும்புதலை பிரசங்கிக்கவே அனுப்பப்பட்டனர். (எரேமி. 35:15. படிக்க)

புதிய ஏற்பாட்டிலும் மனந் திரும்புதல் பிரசங்கிக்கவும் போதிக்கவும் முக்கியமாகக் கூறப்பட்டுள்ளன. யோவான்ஸ்நாபகனும் (மத். 3:1,2) இயேசுவும் (4:17) பேதுரு, பவுல் ஆகியோரும் (அப். 2:38,3:19,26:20) இதனை வலியுறுத்தியுள்ளனர். இயேசுவும் சபைகளுக்கு எழுதிய கடிதங்களில் இதனை வற்புறுத்தியுள்ளார் (வெளி. 2:5,16,21,32; 3:3,19) தேவபயமுள்ள தலைவர்கள் மக்கள் பாவத்தை விட்டுவிடும்படி அவர்களைக் கண்டிக்கிறார்கள்.

பொய்யான தலைவர்கள் பாவத்தின் உக்கிரத்தைத் தணித்து விடுகிறார்கள். அவர்களைக் குறித்து அவர்கள் என்னை அசட்டை பண்ணுகிறவர்களை நோக்கி: உங்களுக்கு சமாதானம் இருக்குமென்று கர்த்தர் சொன்னார் என்று சொல்லுகிறதுமன்றி, தங்கள் இருதயத்தின் கடினத்திலே நடக்கிற யாவரையும் நோக்கி உங்கள் மேல் பொல்லாப்பு வராதென்றும் சொல்லுகிறார்கள்". (எரே.23:17) மேலும் ".....பொல்லாதவர்களின் கைகளைத் திடப்படுத்துகிறார்கள்" (எரே. 23:14)

இன்றும் தேவன் சபையைப் பார்த்து அது ஜெபத்திலும், வல்லமையிலும் குறைவுபட்டுக் கொண்டே போவதால் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்.

பொய்யான தீர்க்கர்களும் தலைவர்களும் மற்றவர்களைப் பிரியப்படுத்தி தங்களுக்கு உதவியை நாடுகிறார்கள். ஒவ்வொருவரும் தன்னை வெறுத்து சிலுவையை எடுத்து கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்துவதில்லை. பாவத்தின் கொடுமையையும் நியாயத்தீர்ப்பையும் வெளிப்படுத்துவதில்லை. அவர்கள் மற்றவர்களைப் புகழ்ந்து மனந்திரும்புதலும் கீழ்ப்படிதலும் இல்லாமலேயே தேவ தயவைப் பெற முடியும் என்று கூறுவார்கள்.

4. பொய்யான தலைவர்கள் தேவ வசனத்தை தவறாக பயன்படுத்துகிறார்கள்; உத்தம தலைவர்கள் தேவனுடைய முழு ஆலோசனையும் அறிவிக்கிறார்கள்:

உத்தம தலைவர்கள் மனந் திரும்புதலைப் பிரசங்கிப்பது மட்டுமல்ல அவர்கள் அப். 20:27ன்படி தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் மறைத்து வைக்காமல் போதிக்கிறார்கள். அவர்களுக்கு "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும் கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது". (2தீமோ.3:16,17) என்பது தெரியும். அவர்கள் வசனத்தைப் புரட்டவோ கலப்புள்ளதாகவோ செய்வதில்லை. அவர்கள் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணி, கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு புத்தி சொல்லுவார்கள். (4:2) அவர்கள் தேவனால் அங்கிகரிக்கப்பட்டவர்களாகவும் வெட்கப்படாத ஊழியக்காரருமாயிருப்பார்கள் (2:15) தேவ வசனத்தை நேர்மையாகவும் வல்லமையாகவும் பிரசங்கிப்பார்கள். பிரசித்தி பெற்ற இறையியலுக்குச் சாய்ந்து விடாதபடி, "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தினை பிரசங்கிப்பார்கள்". (யூதா. 3)

பொய்யான தலைவர்கள் தீமைக்கு வழிகாட்டுவார்கள். தங்கள் நோக்கங்களுக்கு ஏற்ற வேத பகுதிகளைத் தெரிந்து கொண்டு தங்கள் நலனுக்காக அதனைத் திரித்துக் கூறுவார்கள் (எரே.23:36; கலா.1:7; 2 பேது.3:16)"அவர்கள் கர்த்தருடைய வாக்கை அல்ல, தாங்கள் யூகித்த தரிசனத்தைச் சொல்லுகிறார்கள்". (எரே.23:16) ".....தாங்கள் ஒன்றும் தரிசியாதிருந்தும், தங்களுடைய ஆவியின் ஏவுதலைப் பின் பற்றுகிற மதிகெட்ட தீர்க்கதரிசிகளுக்கு ஐயோ!" (எசேக். 13:2-3)

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

பொய்யான தலைவர்கள் ஏமாற்றுகிறவர்கள், எனவேதான் தேவனுடைய பிள்ளைகள் மிகவும் ஜாக்கிரதையாயிருந்து தேவவசனத்தை இருதயத்தில் பதித்து கள்ளப் போதகங்களுக்குத் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும். நாம் கிறிஸ்துவில் வளர்ந்தால் மட்டுமே வலைகளுக்குத் தப்ப x ½¥ D. "நாம் இனி குழந்தைகளாயிராமல் மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கு ஏதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்.." (எபேசி.4:14) என வாசிக்கிறோம்.

5. பொய்யான தலைவர்கள் கிறிஸ்துவைக் குறித்த புரட்டு இறையியலை பயன்படுத்துகிறார்கள். உத்தம தலைவர்கள் தங்கள் நோக்கத்தை கிறிஸ்துவின் மேலேயே வைக்கிறார்கள்:

பொய்யான ஒரு போதகன் அல்லது தீர்க்கனின் முக்கியமான அடையாளம் கிறிஸ்துவின் நபரத்துவம் மற்றும் பணியினைக் குறித்த புரட்டு இறையியலாகும். "அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து....."(2 பேது. 2:1) "ஏனெனில் நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாக புரட்டி, ஒன்றான ஆண்டவராகிய தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவையும் மறுதலிக்கிற பக்தியற்றவர்களாகி....." (யூதா. 4) ".... அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றிய தேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றிய தல்ல. ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரபிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது". கொ. 2:8,9

புதிய ஏற்பாடு முழுவதும் கிறிஸ்துவையே மையமாகக் கொண்டுள்ளது. "..... இயேசுக் கிறிஸ்து வினுடைய வம்ச வரலாறு" (மத். 1:1) "நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக". (வெளி. 22:21) மத்தேயுவிலிருந்து வெளிப்படுத்தல் வரை கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பு, தெய்வீகம், வல்லமையான ஊழியம், பாவமற்ற வாழ்வு, தியாகமான மரணம், உயிர்த்தெழுதல், பரத்துக்கேறியது மற்றும் பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்திருப்பது மறுபடியும் வருவேன் என்ற வாக்கு போன்றவை விளக்கப்பட்டுள்ளன.

ஆனால் கிறிஸ்துவின் இந்த மையத்துவம் பொய்யான தலைவர்களால் மறுதலிக்கப்படுகிறது. அந்திக் கிறிஸ்துவின் ஆவி அதிகமாக செயல்படுகிறது. (1யோவா.4:3) அந்த ஆவி, கிறிஸ்துவின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய அனைத்திற்கும் எதிரானது. மேலே கூறப்பட்ட கிறிஸ்துவின் அதிசய பிறப்பு, தெய்வீகம், மரணம், உயிர்த் தெழுதல், இரண்டாம் வருகை போன்ற வற்றிற்கு எதிரானவர்களுக்கு எச்சரிக்கை யாயிருங்கள்.

ஆனால் உத்தம தலைவர்கள் கிறிஸ்துவை மையமாக்கி அவரை எல்லாருக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்துவார்கள். அவர்களது பிரசங்கமும் போதனையும் கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருக்கும். (1 கொரி. 1:28; கொலோ. 1:28) அவர்களது உபதேசம் புதிய ஏற்பாட்டின் அடிப்படையிலும் சபையின் நீண்ட கால பாரம்பரியத்தையும் ஒட்டியிருக்கும். "நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும் எங்களையோ, இயேசு வினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும், பிரசங்கிக்கிறோம்".(2 கொரி. 4:5)

6. பொய்யான தலைவர்கள் தேவபய மற்ற குணமுடையவர்கள். உண்மையான தலைவர்களோ உறுதியான தேவபயமுடையவர்கள்:

இவர்களைக்குறித்து தேவன் எரேமியா மூலம் புலம்புவதை எரே.23:9-14 வசனங்களில் படியுங்கள். செப்பனியா இதைக் குறித்து, "(எருசலேமின்) தீர்க்கதரிசிகள் வீண்பெருமையும் வஞ்சகமுமுள்ளவர்கள்; அதின் ஆசாரியர்கள் பரிசுத்தஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி, வேதத்துக்கு அநியாயஞ் செய்தார்கள்" (செப். 3:4) என்கிறார். அதன் தலைவர்கள் சன்மார்க்க நெறியற்றவர்களும், பொல்லாப்பும், பொய்யும், கவலையீனமும், துரோகம் நிரம்பினவர்களுமாயிருந்தனர். அவர்கள்மூலம் தேசம் முழுவதும் சீர்கேடு பரவியது. (எரே.23:15)

இதுவே புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் சம்பவித்தது. "தேவனுடைய கிருபையை காம விகாரத்துக் காகப் புரட்டி ..." (யூதா.4) "...மாம்சத்தை அசுசிப் படுத்திக்கொண்டு, கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணி..." (யூதா.8) "இவர்கள் முறுமுறுக்கிறவர்களும், முறையிடுகிறவர்களும், தங்கள் இச்சைகளின் படி நடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள், இவர்களுடைய வாய் இறுமாப்பான வைகளைப்பேசும், தற்பொழிவுக்காக முகஸ்துதி செய்வார்கள்" (யூதா.16) அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களைக் குறித்து 2 பேதுரு. 2:10-14 வசனங்களில் கூறுவதை வாசியுங்கள். "அவர்களே அடிமைப்பட்டிருக்கும் போது பிறருக்கு சுயாதீனத்தை அறிவிக்கிறார்கள்".தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும், அவர்களுக்கு சுயாதீனத்தை வாக்குத் தத்தம் பண்ணுகிறார்கள். (2 பேது. 2:19)

தங்கள் தேவபயமின்மையை அவர்கள் மறைக்கக் கூடியவர்களாயிருந்தார்கள். இதைக் குறித்து ஆண்டவராகிய இயேசு கடிந்து கொள்வதை மத்.23:27,28 வசனங்களில் படியுங்கள். இயேசுவால் அவர்களது மறைவைக் காணவும் சுட்டிக் காட்டவும் முடிந்தது. (மத்.3:5-6; லூக். 20:46) அவர்கள் பிரசங்கித்ததின்படி செயல் படவில்லை (மத். 23:3) அவர்கள் நீதியும், இரக்கமும், உத்தமமற்றவர்கள் (23:23).

எதிர்மாறாக உத்தம ஊழியக் காரனான பவுலைப் பார்க்கும் போது, "எங்கள் போதகம் வஞ்சகத்தினாலும், துராசையினாலும் உண்டாகவில்லை. அது கபடமுள்ளதாயுமிருக்கவில்லை .....நாங்கள் மனுஷருக்கல்ல தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம்". (1 தெச. 2:3-6) என்றும் 10ம் வசனத்தில், பரிசுத்தமும், நீதியும், பிழையின்மையுமாய் நடந்தோமென்றும் குறிப்பிடுகிறார். தீமோத்தேயு நல்ல மாதிரியாயிருக்க அறிவுறுத்தும் அவர் கண்காணியானவன் எப்படியிருக்க வேண்டுமென்று 1 தீமோ. 3:2,3 வசனங்களில் குறிப்பிடுகிறார். சுருக்கமாகக் கூறினால் தலைவர்கள் தங்கள் வாழ்வின் எப்பகுதியிலும் தெய்வீகப் பண்புடையவர்களாயிருப்பதை அவர் எதிர்பார்க்கிறார்.

7. பொய்யான தலைவர்கள் கெட்ட கனிகளைக் கொடுப்பார்கள். உண்மையான தலைவர்கள் நற்கனிகளைக் கொடுப்பார்கள்:

"அவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள். அவர்கள் கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" மத்.7:15,16) அவர்கள் பிளவுகளை ஏற்படுத்துகிறவர்கள் (யூதா.19) தேவனுடைய மந்தையிலுள்ள ஆடுகளை அழித்து சிதறடிக்கிறவர்கள். (எரே.23:1) "...மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும், உங்களிலும் சிலர் எழும்பி சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்வார்கள்." (அப். 20:29,30) ரோமருக்குப் பவுல் எழுதுவதை ரோ.16:17-18 வசனங்களில் படியுங்கள்.

நேர்மாறாக உத்தம தலைவர்கள் பரிசுத்தவான்களை நிலைநிறுத்தி விசுவாசத்தில் ஒன்றுபட பரிசுத்தவான்களைக் கட்டுகிறார்கள். (எபேசி.4:13) ஆண்டவர் கொடுத்த அதிகாரத்தை 'இடித்துப் போட அல்ல, ஊன்றக்கட்ட' (2 கொரி. 13:10) பயன்படுத்துவார்கள். மேலும் 2 கொரி 6:3-10 படியுங்கள். இத்தகைய ஊழியத்தால் சுவிசேஷம் ஆவிக்குரிய கனியைத் தரும். (கொலோ. 1:6-7)

எப்போதும் விழித்திருங்கள்

தேவனுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய தலைவர்கள் வாழ்வைக் குறித்து விழிப்புடனிருக்க வேண்டும். பொய்யான ஊழியக்காரர் கிறிஸ்துவின் சரீரத்தைக் கெடுக்காதபடியும் கவனமாயிருக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளை 2தீமோ. 3:13லும் பேதுருவின் வார்த்தைகளை 2பேது. 2:22 ஆகிய வசனங்களிலும் படிப்போம்.

எனவே நாம் பொய்யான தலைவர்களைக் கண்டறிந்து நம்மை நாமே பாது காத்துக் கொள்ள வேண்டும். அவர்களுடைய தீர்ப்பு நிச்சயம். 'இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது' (யூதா.13) எனவே யாரும் உங்களை வஞ்சியாதபடி எச்சரிக்கையாயிருங்கள்(மத். 24:4)

ஒரு தலைவன் தன் காரியங்களுக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுத்தால் அவன் நல்ல தலைவனல்ல. உண்மையான தலைவன் தாழ்மையுள்ளவனும் பிறருடைய தேவைகளுக்கு அதிக கவனம் செலுத்துகிறவனுமாயிருக்க வேண்டும்.

பாவத்தின் வஞ்சனை

The deceitfulness of Sin

Charles H. Spurgeon (1834-1892)

"உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப் பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப் படுமளவும் நாடோறும் ஒருவருக் கொருவர் புத்தி சொல்லுங்கள்". எபி.3: 13

பாவத்தின் வஞ்சனை மிகவும் அழிவுக்கேதுவானது. எனவே விழிப் போடும் ஜெபத்தோடும் இரகசிய பாவங் கள், மறைக்கப்பட்டிருக்கும் பாவங்கள், பரவலான பாவங்கள், கவர்ச்சியான பாவங்கள்,வஞ்சகமான பாவங்கள் என் பவற்றிற்கு மிகவும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

பாவத்திற்கு வஞ்சனை செய்யும் தனிப்பட்ட வலிமை உண்டு. பாவம் அதன் கொடூரத்தை வெளிக் காட்டுவது மில்லை, அதன் பயங்கர விளைவுகளைக் காண்பிப்பதுமில்லை. ஆனால் தந்திர மாக நம்மிடம்வருகிறது. பாவப்பழக்கம் அதன் தண்டனையை சந்தேகிக்கச் செய் கிறது. "தேவன் சொன்னதுண்டோ?" என்ற கேள்வி தேவபயத்தின் அஸ்திபாரத் தைக் குலைத்து விடுகிறது. ஒரு சிறு துளி அவநம்பிக்கை ஆத்துமாவின் அனைத்து சிந்தனைகளையும் நச்சுப்படுத்திவிடும்!

பாவம் ஒரு ஆலோசனையாக வோ, மனோபாவனையாகவோ, சொப் பனம் போலவோ வரலாம். நீங்கள் அதனை ஒரு தவறாக எண்ணாமல், இன்பமாகவும் கவர்ச்சியாகவும் எண்ணு கிறீர்கள். எண்ணங்கள் உங்களைக் கவர்ந்து தீமை செயல்பட ஆரம்பிக்கிறது எண்ணங்கள் ஆசைகளாகவும், ஆசைகள் நோக்கமா கவும், நோக்கம் செயலாகவும் முதிர்ச்சிய டைகிறது. நாம் உணருவதற்கு முன்பாகவே பாவம் வஞ்சகமாக ஆத்து மாவுக்குள் நுழைந்து விடுகிறது.

பாவம் நமக்கும் நமது சூழலுக்கும் ஏற்றபடி தன்னை அமைத்துக் கொள்ளும். பாவத்தின் அம்பறாத் தூணியில் தனவந்தர்களுக் கான அம்பும், ஏழைகளுக்கான கணையும் உண்டு. அதற்குள் செழிப் பானவர்களுக்கு ஒரு விதமான நச்சும் வெற்றியற்றவர்களுக்கு இன்னொரு விதமான நச்சும் இருக்கும். பாவமாகிய இந்த மீன்பிடிகாரன் வாழ்க்கையாகிய கடலில் ஒவ்வொரு வகையான மீனுக் கும் ஒவ்வொரு வகையான இரையை பயன்படுத்துவது வழக்கம். ஏனெனில் யாரைப் பிடிப்பது என்ற சிறந்த அறிவு அதனிடமுண்டு. பாவம் உங்களை ஒரு ஆந்தைக் குஞ்சு போன்ற எளிமையுடை யவர்களாகக் கண்டால் அது உங்களில் பகைமை, கனவு, தேவனை சந்தேகப் படுதல் அல்லது இலாபத்திற்கான குறுக்கு வழிகள் போன்ற வழிகளில் சோதிக்கும். தனம் படைத்தவர்களை சுயநலன், பெருமை, உலக நாகரிக நடை போன்ற பாதைகளில் கவனம் செலுத்த வைக்கும். நாம் நம்மைக் குறித்து அறிவதைவிட சாத்தான் நம்மைக் குறித்து அறிவான். அவனுக்கு நமது சகல பலவீனங்களும் தெரியும். ஒரு பதுங்கும் சிங்கத்தைப் போல நம்மை விழுங்கக் காத்திருக் கிறான். அவனது வார்த்தைகள் வெண் ணெயை விட மெதுவானவை. ஆனால் உள்ளாக உருவின பட்டயங்கள். எனவே அவனது சோதனைக்கு எதிராக நாம் மிகவும் விழிப்புடனிருக்க வேண்டும்.

பாவத்தின் பளபளப்பு

பாவம் அதன் நோக்கத்தில் வஞ்சகமானது. அது நமக்கு முன் வைக்கும் நோக்கத்தின் விளைவு எதி ரானது. நாம் நமது சிருஷ்டிகரை கோபப் படுத்தவும் அல்லது மனப்பூர்வமாக நீதியின் அதிகாரத்தை தள்ளி விடவும் சோதிக்கப்படுவதில்லை. ஆனால் அதி லிருந்து நன்மை வரப் போகிறது என்ற அபிப்பிராயத்தில் தீமை செய்யத் தூண்டப்படுகிறோம். ஒருவன் பாவத் துக்கு இடங்கொடுக்கும் போது, அதிகப் படியான இன்பம் அல்லது இலாபம் அல்லது ஒரு தீமையை விலக்குதல், அல்லது ஏதோ ஒரு பயத்திலிருந்து விடுதலை போன்றவற்றை எதிர்பார்க் கிறான். இவ்வாறு நன்மை வரும் என்று எதிர்பார்த்து தீமை செய்கிறான்.

இவ்வாறு நன்மை போல குறுகிய பார்வையுடைய மனிதனின் முன்னால் தொங்கிக் கொண்டிருப்பது மீனுக்கு முன்னாலுள்ள இரைக்கு ஒப்பானது. மனிதன் தேவனுடைய கட்டளையை மீறி பாவம் செய்ய விரும்புவதில்லை. ஆயினும் தேவனுடைய ஞானத்தைப் பெற்று நடத்தப்படுவதே நன்மையானது என்று புரிந்து கொள்ள முடியவில்லை.

தேவன் வேண்டாம் என்றதை மனித சித்தம் விரும்புகிறது. விலக்கப் பட்ட கனியைப் புசித்தால் கண்கள் திறக்கப்பட்டு தேவனைப் போலாவீர் களென்றும் அதைத் தவிர்க்க தேவன் அதைப் புசிக்கக்கூடாதென்று சொன் னார் என சர்ப்பம் வஞ்சிக்கிறது. பாவத்தின் சம்பளம் பளபளப்பாய் தோன்றலாம். ஆனாலும் அது தங்கமல்ல. இந்த வஞ்சகம் தெருக்களிலும், வீடுக ளிலும் எங்கும் காணப்படுவதால் நாம் தேவனுக்குள் வாசமாயிருப்பது அவசி யம். ஒரு சிறு ஆதாயத்துக்காக நேரான பாதையை விடுவோமானால் அது நரகத் துக்கு வழிநடத்தும்.

வஞ்சக விவாதங்கள்

"இதைப் பெரிது படுத்தாதே.இது மிகச் சிறியது தானே? இந்தச் சிறிய காரியத்தைக் குறித்துக் கவலை வேண் டாம். இது சரியல்லவென்றாலும் ஒரு அற்பமானது தான். இதை கவனிக்க வேண்டாம். செய், செய்" என்கிற விவா தம் நமக்குள் எழுகிறதா? அன்பான வர்களே, சிறிய பாவம் என்பதொன் றில்லை. உடை வாளின் நுனி சிறியது. ஆனால் ஆபத்தானது. ஆண்டவரை துக்கப்படுத்துவது எதுவானாலும் அது சிறிய தீமை அல்ல. மரத்தின் கனியைப் பறிப்பது மிக எளிது. ஆனால் உலகம் அனைத்துக்கும் அது மரணத்தைக் கொண்டு வந்தது. எனவே மிகச் சிறிய தாகத் தோன்றும் பாவம் நித்தியமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை மறக்க வேண்டாம்.

பாவம் இப்படியும் கேள்வி எழுப்பலாம். இது உண்மையாகவே தவறா? காலங்கள் மாறி விட வில்லையா? சூழ்நிலைகள் கட்டளைகளை மாற்ற வில்லையா? தவறு செய்ய விரும்பு கிறவன் தனக்கு சாதகமாக எதையும் கண்டு பிடிக்கலாம். இவ்வாறு சாக்குப் போக்கு சொல்லுகிறவர்கள் சத்துருவின் எல்லையோரத்திலிருக்கிறார்கள். தேவனுக்கு உண்மையாயிருப்பவர்கள் கேள்வி எழுப்பாமல் அமைதியாய் இருப்பார்கள்.

பாவம் ஒருவனுக்கு முகஸ்துதி சொல்லி, அவன் போகுமட்டும் போய் விட்டு திரும்பி வரட்டும் என்ற தன்மை யுடையது. அவன் குற்றத்தின் விளிம்பு வரை சென்றாலும் அவன் களங்கமற்றி ருக்கலாம். இன்னொருவன் ஆபத்தான நிலையிலிருந்தாலும் தனது திறமையால் ஒரு குறிப்பிட்ட நிலையில் பாதுகாவ லுக்கு வந்துவிடலாம் என்று எண்ணு கிறான். பாவத்தின் வஞ்சகம் அவர்கள் அதிக ஆபத்திலிருப்பதை அவர்கள் உணராத படி செய்து விடுகிறது. விழித் திருந்து ஜெபிப்போம். பாவத்தின் வஞ்சகத்துக்கு நம்மை விலக்கிக் கொள்வோம்.

பாவம் "நீ தவறு செய்தாலும் அவ்வளவு கேடாக இருக்கவில்லை", என்று கூறி சமாதானப்படுத்துகிறது. மேலும் மற்றவர்களைவிட நீ நன்றா யிருக்கிறாய் என்றும் கூறுகிறது. இவ்வாறு பாவம் செய்கிறவன் தனது பாவத்தையே ஆடையாக்கிக் கொள் கிறான். நமது பாவங்களிலேயே சுயநீதி யுடனிருக்கிறோம்.

பின்பு பாவம் "இடிந்து போன காலத்தைச் சரிக்கட்டி விடலாம். தேவனைக் கிட்டி சேரு. அப்போது உன் வழிவிலகல் சரிப்பட்டுவிடும்" என்று ஆலோசனை கூறலாம். உனது பாவங் களுக்காக ஏதோ நல்ல காரியங்கள் செய்து ஈடு செய்துவிடு என்றும் கூறலாம்.

தவறான வாக்குத்தத்தம்

பாவம் சுயாதீனத்தை வாக்க ளிக்கிறது. அது பாவம் செய்கிறவர்களை அடிமைப்படுத்தி விடுகிறது.அதுவெளிச் சத்தை வாக்குப் பண்ணுகிறது. அந்த மனிதன் இந்தப் புதிய வெளிச்சத்தைப் பின்பற்றும் போது அது இருளாகி பன்மடங்கு கொடிய இருளுக்குள் அவனை அகப்படுத்துகிறது. இவ்வாறு அது தன் வாக்குகளில் உண்மையற்றது. தூய்மை என்பது சத்தியம், ஆனால் பாவம் என்பது பொய். அது இன்பத்தை வாக்களித்துத் துன்பத்தில் கொண்டு விடுகிறது. அது பரலோகத்தை வாக்க ளித்து நித்திய நரகத்துக்கு ஆளாக்குகிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

உண்மையில் நிலை நிற்க ஆண்டவரை நம்பு

ஒருவரும் தான் ஏமாற்றப்பட முடியாது என்று எண்ணக் கூடாது. ஏனெனில் தன் பெருமையால் அவன் ஏற்கெனவே வஞ்சிக்கப்பட்டுவிட்டான். எந்த ஒரு பெண்ணும் நான் பரிபூரண மடைந்து விட்டேன், எனவே பாவத் தால் வஞ்சிக்கப்பட மாட்டேன் என்று சொல்ல முடியாது. அவள் இப்போது மிகவும் ஆபத்தான நிலையிலிருக்கிறாள். நமது எதிரி மிகவும் தந்திரவான். பழைய பாம்பாகிய அவனுக்கும் பாவத்தின் வஞ்சகத்துக்கும் ஈடு கொடுக்க நமது ஞானம் போதாது. 'தேவ ஞானமாகிய' ஆண்டவரின் உதவியில்லாவிட்டால் நமது பாவத்தில் நாம் மாளுவோம்.

செயல்முறை கருத்து

இந்த பாவத்தின் வஞ்சகத் தையும் மனக்கடினமாகுதலின் தன்மை யையும் எப்படி எதிர்த்துப் போராடுவது? "பின்னும் என்னுடைய இளைப்பாறு தலில் பிரவேசிப்பதில்லையென்று அவர் யாரைக் குறித்து ஆணையிட்டார்? கீழ்ப்படியாதவர்களைக் குறித்தல்லவா? ஆதலால் அவிசுவாசத்தினாலே அவர்கள் அதில் பிரவேசிக்கக் கூடாமற் போனார் களென்று பார்க்கிறோம்". (எபி. 3:18-19) விசுவாசியுங்கள்! விசுவாசம் உங்களை இரட்சித்தது. அதுவே உங்களை இரட்சிக் கவும் கூடும். அதுவே கிறிஸ்துவில் நீங்கள் நிலைத்திருக்கச் செய்யும். தற்கால சோதனைகளுக்கு எதிராக விசுவாசி யுங்கள். வருங்கால வஞ்சகங்களுக்கு எதிராக விசுவாசியுங்கள். விசுவாசம் வளர வளர பாவத்தின் வஞ்சனை குறையும். ஜீவனுள்ள தேவனை விசுவாசியுங்கள். அவரது நீதியையும் விசுவாசியுங்கள். அப்போது பாவம் அதிகக் கேடாகத் தென்படும். உங்கள் பாவத்தை தமது சரீரத்தில் சுமந்த கிறிஸ்துவை விசுவாசி யுங்கள், பாவம் அதிகக் கருமையாகத் தென்படும். தூய ஆவியானவரை விசு வாசியுங்கள். அவரது வல்லமையால் பாவத்தின் வஞ்சகத்திலிருந்து விடுபட முடியும். அரைகுறை விசுவாசி சறுக்கும் போது விசுவாசி உறுதியாக நிற்பான்.

நீங்கள் சாத்தானின் வஞ்ச கத்திலிருந்து இரட்சிக்கப்பட்டிருந்தால் தேவனுக்கு முன்பாக அதனை உத்தம மாக அறிக்கையிடுங்கள். ஜீவனுள்ள தேவனுக்கு முன்பாக உங்கள் இருதயம் வெறுமையாக்கப்பட வேண்டும். உங்கள் பொல்லாப்புகளை அறிக்கையிடுவதால் உங்கள் தாழ்மையான பாவ உணர்வு உங்கள் மன்னிப்புக்கு மட்டுமல்ல, உங்கள் எதிர்கால பரிசுத்தத்துக்கும் ஏது வாயிருக்கும். தேவ ஆவியானவர் இவை களை உங்களுக்குப் போதிப்பாராக.

இருதய உருக்கத்தை உருவாக் குங்கள். தேவ வசனம் முதிர்ந்த பயிர் வேனிற்கால காற்றில் அசைவாடுவது போல என்னை அசைவாடச் செய்யும். தேவ ஆவியால் நான் தென்றலில் இலை கள் அசைவது போல தயாராக அசை வேன். எனது ஆண்டவரின் மெல்லிய மூச்சுக்கும் நான் உணர்வுள்ளவனாயிருப் பேன்.

ஆண்டவர் தமது கிருபையால் பாதுகாக்கும் போது நாம் ஒருவரை யொருவர் உற்சாகப்படுத்துவோம். நல்ல விசுவாசிகள் சினேகிதரின் தொடர்பால் நன்கு வளருவார்கள்.

இ வை யெ ல் லா வற் றிற் கும் மேலாக ஆண்டவர் பத்திரமாகக் காக்கிற வர்கள் காக்கப்படுவார்கள் என்பது உண்மை. இடறாதபடி காக்க வல்ல ஆண்டவராகிய தூய ஆவியானவருக்கு உங்களை ஒப்புவியுங்கள். அனைத்து பொய்மைகளிலும் பாவத்திலுமிருந்து கடைசி மட்டும் காக்கக்கூடிய உத்தம முள்ள சாட்சியாகிய அவரை நம்புங்கள்.

கிறிஸ்தவனின் முத்திரை வாக்கியம்

The Christians watch word

Lee Ronerts (1909 - 2007)

"உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார்". பிலி. 4:5

கர்த்தர் சமீபமாயிருக்கிறார் என்ற வாக்கியம் அப்போஸ்தலரின் விருப்பமான ஒன்றும் ஆதி கிறிஸ்தவர் களின் முத்திரை வாக்கியமுமாகும். அவர்கள் காலத்தின் அளவிலும் இட அளவிலும் ஆண்டவரோடு மிக நெருக் கத்தை உடையவர்களாயிருந்தனர்.

'கர்த்தர் சமீபமாயிருக்கிறார்' அவர் எப்போதும் நம்மோடிருப்பவர். நாம் அவர் மீது சாய்ந்து அவரில் இளைப் பாறி பயமின்றி வாழ வேண்டும். அவரது இரண்டாம் வருகை சமீபம். அப்போஸ் தலன் காலத்திலேயே 'கர்த்தர் சமீபமா யிருக்கிறார்' என்று சொல்லப்பட்டால் இப்போது அவர் அதைவிட சமீபமா யிருக்க வேண்டுமே. அவர் வருகை சமீப மாயிருப்பதால் நாம் செய்ய வேண்டி யவை எவை?

1.ஜெபத்தோடிருக்க வேண்டும்:

"அக்காலத்தைநீங்கள்அறியாத படியால் எச்சரிக்கையாயிருங்கள், விழித் திருந்து ஜெபம்பண்ணுங்கள்" மாற்கு.13:33. கிறிஸ்தவனின் மிகப்பெரிய தேவை இன்று அதிக அளவிலான ஜெபம்.நமது இருதயத்தின் ஆழமான பகுதிகளைத் தோண்டும் ஜெபம் வேண்டும். பற்றி எரிவதும், உத்தமமானதும், இதயப் பூர்வமானதுமான ஜெபம் பரலோக சிங்காசனத்தை எட்டி தூய ஆவியான வரின் ஆராயும் விளக்கு நமது இருதயங் களில் பிரகாசிக்கும். கடந்த காலங்களில் தேவனால் மிக அதிகமாக பயன்படுத்தப் பட்டவர்கள் பலத்த ஜெப வீரர்களா யிருந்தனர். அவர்களது வாழ்க்கை வரலாறுகளை வாசிக்கும் போது அவர்கள் வாழ்வில் ஜெப ஆவி ஓங்கி நிற்பதைக் காணலாம்.

தேவ குமாரனாகிய இயேசு ஜெபிக்க சமயம் எடுத்துக் கொண்டார். அவரது சுறுசுறுப்பான பணி மற்றும் சேவைகளின் வாய்ப்பினை பார்க்கும் போது அவரைக் குறித்து திரள் கூட்ட மான மக்கள் கூடிய போது அங்கிருந்து விலகி தனியிடம் தேடி ஜெபித்தார் எனக் காண்கிறோம். கெத்செமெனே தோட் டத்தில் ஆவியில் மிகுந்த வியாகுலத் தோடு ஜெபித்த போது அவரது வியர்வை இரத்தத்தின் பெரும் துளிகளாகத் தரை யில் விழுந்தது. தேவனிடம் வல்லமை யைப் பெற்றுக் கொள்ள இவ்வளவு கிரயம் நாம் செலுத்துவதில்லை. சகல வல்லமையும் பொருந்திய தேவ குமாரன் இவ்வாறு ஜெபித்தது ஜெபத்தின் தேவை யை நமக்கு உணர்த்துகிறது.

நல்ல தாலந்துகளைப் பெற்றவர் களும் தேவ சேவைக்கு சகல தகுதியும் படைத்தவர்களும் ஜெபம் இல்லாத படியால் தோல்வியைத் தழுவுகின்றனர். தேவனை சேவிக்கப் பலவழிமுறை களைத் தெரிந்திருந்தால் போதும் என்று பலர் எண்ணுகின்றனர். இந்த எண்ணம் உங்களை விட்டு அகல வேண்டும். ஜெப மாகிய செட்டைகளின் மூலம் செலுத்தப் படாத ஜெபம் எந்த வழிமுறையாலும் பயன் தருவதில்லை. எனவே அந்தரங்க மான இடத்தில் சென்று பதில் கிடைக்கு மட்டும் ஜெபிப்போம்.

ஐந்து நிமிடமாவது உத்தமமாக ஜெபிக்காமல் நண்பர்களிடமும், குடும்ப அங்கத்தினருடனும் ஆலோசனை கேட்பது புத்தியீனமானது. எல்லா ஞான முமுடைய தேவனுடைய தலைமைத்து வமிருக்கும் போது மனித ஆலோ சனையை ஏன் கேட்கிறோம்!

கர்த்தர் சமீபமாயிருக்கிறார். எனவே ஜெபத்தோடிருங்கள். சிறிய காரியங்களுக்காகவும் ஜெபியுங்கள். உங்கள் வாழ்வை பாதிக்கும் எல்லா தொடர்புகளுக்காகவும் ஜெபியுங்கள். ஜெபமின்றி தெய்வீகக் கிறிஸ்தவ வாழ்வு வாழ்வது கூடாதது.

2. கர்த்தர் சமீபமாயிருக்கிறார், எனவே பொறுமையாயிருங்கள்:

"இப்படியிருக்க சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமை யாயிருங்கள். இதோ பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடைய வேண்டு மென்று முன்மாரியும் பின் மாரியும் வருமளவும் நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறு மையோடிருந்து உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள். கர்த்தரின் வருகை சமீப மாயிருக்கிறதே" யாக். 5:7-8

கர்த்தர் சமீபமாயிருப்பதால் உங்கள் கிறிஸ்தவ உழைப்புகளிலும் பொறுமையாயிருங்கள். ஒரு அறுவ டைக்கு முன்னால் விதைக்கிற ஒரு காலமுண்டு. கிறிஸ்துவின் பணியாளர் களாகிய நாம் எப்போதும் அறுவடை செய்ய முடியாது. ஆனால் நாம் விதைப்பது அவசியம். குடியானவன் அறுவடையின் காலத்திற்காக எதிர்பார்த் திருப்பது போல் நாமும் காத்திருக்க வேண்டும்.

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

கடினங்களில் பொறுமையாயிருக்க வேண்டும். இயேசு வெளிப்படும் போது நமது எல்லாக் கவலைகளும், கரிசனைகளும் மறைந்து போகும். இன்று எல்லாவற்றிற்காகவும் கலங்குகிறோம். ஆனால் இப்போது அவர் வந்து விட்டால் கலக்கங்கள் மறைந்து நாம் அவரை சந்திக்க எழும்புவோம். "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து, உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" பிலி. 4:6. இதோடு ஒரு வாக்குத்தத்தமும் அருளப்பட்டுள்ளது. "அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்". வச. 7.

துக்கங்களில் பொறுமையாயிருக்க வேண்டும். பவுல் இதை விசுவாசித்தபடியால் அனேக இருளின் நாட்களில் அவர் நிலை நிற்க ஏதுவாயிருந்தது. தெசலோனிக்கேயர் சபையாரை உற்சாகப்படுத்தவும் இந்த வசனம் உதவியாயிருந்தது. 1தெச.4:3-18 வசனங்களைப் படிப்போம்.

அவரது வருகையின் வாக்குத்தத்தம் துக்க காலங்களில் ஆறுதலளிக்கிறது. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள். உயிரோடிருப்பவர்கள் மறுரூபமடைவார்கள். ஆகாயத்தில் மகிமையான ஒரு மறு ஐக்கியம் ஏற்படும். நம்மில் அனேகர் நமக்கு மிகவும் அன்பானவர்களை இழந்து கண்ணீரோடு இருக்கலாம். கர்த்தர் சமீபமாயிருக்கிறார். அவர் வருகை வெகு சமீபம். நமக்கு அருமையானவர்களை முகமுகமாய்ப் பார்ப்போம்.

பிறரோடுள்ள கருத்துவேறுபாடுகளில் பொறுமையாயிருக்க வேண்டும். யாக். 5:9-11 படிக்க

இது போல பவுல் அப்போஸ்தலன் யூனிக்கேயாவையும் சிந்திக்கேயாளையும் கர்த்தருக்குள் ஏகமனதாயிருக்கும்படி ஆலோசனை சொல்லுகிறார். கர்த்தர் சமீபமாயிருக்கும் போது நமக்கு ஏன் கருத்து வேறுபாடுகள்! அனைத்து வேறுபாடுகளும் அவர் வரும் போது நேராகவும், சரியாகவும் ஆக்கப்படும்.

சிறிய வருத்தங்கள், வசைகள் போன்றவற்றால் துவண்டு போக வேண்டாம். அதை விட ஆயிரம் மடங்கு மேலான காரியங்களில் நம் கவனம் இருக்க வேண்டும். நம்மை கடினமாக நடத்துகிறவர்களிடம் பழிவாங்க வேண்டாம். கர்த்தர் கரத்தில் விட்டு விடுங்கள். உங்கள் சத்துருக்களுக்காக ஜெபம் பண்ணுங்கள். கர்த்தர் வருமளவும் பொறுமையுடனிருங்கள்.

வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். வேத புத்தகத்தின் மிக நல்ல விளக்கம் வேத புத்தகமே.

3. கர்த்தர் சமீபமாயிருப்பதால் பரிசுத்தமாயிருங்கள்:

"பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும் அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்". *1 யோவா 3:2,3*

பவுலும் இதே கருத்தை வெளிப்படுத்துகிறார். "அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாக்கவும் நம்மை சுத்திகரிக்கும்படி நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்". தீத்து. *2:14*

பேதுரு அப்போஸ்தலனும் இதனை ஆதரித்து *2* பேதுரு *3:11*ல் "இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!"

கர்த்தருடைய வருகையின் நாளுக்காக நமது வேத வசனம் நாம் பேச்சிலும், சிந்தையிலும், நடத்தையிலும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க அழைக்கப்படுகிறோம். தூய ஆவியால் நிரப்பப்பட்டால் மாத்திரமே பரிசுத்தமாய் வாழ முடியும். பாவத்திலிருந்தும், உலகத்திலிருந்தும் பிரிந்து வந்தால் மட்டுமே தூய ஆவியானவர் உங்களை ஆட்கொள்ள முடியும்.

தேவனால் பயன்படுத்தப்பட இருதயமும், வாழ்வும், நடக்கையும் பரிசுத்தமாயிருக்க வேண்டும். தேவன் பயன்படுத்தும் பாத்திரம் பரிசுத்தமாயிருக்க வேண்டுமே. அதைக் குறித்து பவுல் *2* தீமோ. *2:19-21* வசனங்களில் விளக்குகிறார். "ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னை சுத்திகரித்துக் கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்".

எஜமான் பயன்படுத்த முடியாத படி உங்கள் வாழ்வில் குறை இருக்கிறதா? அப்படியானால் இந்த வாக்குத்தத்தை பயன்படுத்துங்கள். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார்". *1 யோ. 1:9*

நமது வாழ்வுகள் அடிக்கடி இப்பாவ உலகில் அசுத்தங்களால் தொடப்படுகிறது. ஆகையால் நாம் அப்படியே இருக்க வேண்டியதில்லை. தேவன் நாம் சுத்தமாக்கப்படுவதற்கான வழி வாசல்களை வைத்திருக்கிறார். "அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்".*1 யோவா.3:3*

கிறிஸ்தவர்களாகிய நீங்கள் வாழ்வில் ஒரு புதிய வேறுபாட்டையும், அர்ப்பணத்தையும் பெற வேண்டும். அப்போதுதான் நீங்கள் தேவனால் பயன்படுத்தப்பட முடியும்.

*****

வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்

Search the Scriptures

Andrew Murray (1828 - 1917)

"உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுவதும் அது என் தியானம்". (சங். 119:97)

வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே. என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே. *(யோவா. 5:39)*

மனிதன் தேவனுடைய வாயிலிருந்து வரும் வார்த்தையினால் பிழைப்பான். தேவனுடைய வசனத்தை எப்படி பயன்படுத்த வேண்டுமென்று உங்கள் முழுமனதோடு கற்றுக் கொள்ளுங்கள்.

புரிந்து கொள்ளுதலை விட மனப்பூர்வமாக வேத வசனத்தை வாசியுங்கள். புரிந்து கொள்ளுதல் அறியவும் கிரகிக்கவும் உதவுகிறது. இருதயமோ நாம் வாஞ்சிக்கவும் நேசிக்கவும் நிலை நிற்கவும் ஏதுவாகிறது. எனவே புரிந்து கொள்ளுதல் இருதயத்திற்கு அடிபணிய வேண்டும். புரிந்து கொள்ளுதல் மற்றும் மாம்ச இயற்கைக்கு இடம் கொடாதிருங்கள் அது ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளாது. எனவே புரிந்து கொள்ளுதலை விட்டு விட்டு, தேவ ஆவியின் உதவிக்காகத் தாழ்மையுடன் காத்திருங்கள். வேதத்தை வாசிக்கும் போதெல்லாம் 'இப்போது நான் ஏற்றுக் கொள்ளும் இந்த வசனம் நான் நேசிப்பதற்கும், அது என்னில் வாசம் பண்ணுவதற்குமாகும்' என்று உங்களுக்குள் சொல்லுங்கள்.

வாசிக்கும் போதெல்லாம் ஜீவனுள்ள தேவனோடுள்ள ஐக்கியத்தோடு வாசியுங்கள். யார் எழுதியது என்ற உணர்வோடு வாசிப்பதால் வல்லமை பெற முடியும். முதலாவது ஜீவனுள்ள தேவனுடைய அருகாமையும் அன்பும் உங்கள் உள்ளத்திலிருக்கட்டும். நித்தியமான தேவன் பேசுகிறார் என்ற உணர்வோடு வாசியுங்கள். உள்ளம் அமைதலாயிருக் கட்டும். அப்போது தேவ வசனம் உங்களுக்கு அதிக ஆசீர்வாதமாயிருக்கும்.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

வேத வசனம் ஜீவனுள்ளது என்றும் அதில் தேவ ஆவியானவர் தங்கியிருக்கிறார் என்றும் விசுவாசிக்கிறவர்களில் அவர் நிச்சயமாய்க் கிரியை செய்கிறார் என்றும் எண்ணி அதனை வாசிக்க வேண்டும். வேத வசனம் விதையாயிருக்கிறது. அது ஜீவனுடையது எனவே வளர்ந்து கனி தரக்கூடியது. முழுவதுமாக அதைப் புரிந்து கொள்ள முடியாவிட்டால் அல்லது அதன் வல்லமையை உணராவிட்டால் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். அதை மனதில் வைத்து தியானிப்பதால் அது கிரியை செய்ய ஆரம்பித்து வளரும். வசனத்தில் தேவ ஆவியானவரிருக்கிறார்.

வேதபுத்தகத்தை வாசிக்கும் போது அதைக் கேட்கிறவர்களாக மட்டுமல்ல. அதன்படி செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். நான் படித்த வசனத்தின் மூலம் தேவன் எனக்குப் போதித்ததென்ன என்ற கேள்விகளுடன் அதனைப் படிக்க வேண்டும். அவர் சொல்வதற்குக் கீழ்ப்படிய வேண்டும். அதனால் மிகுந்த ஆசீர்வாதமுண்டு.

வேதபுத்தகத்தை வாசிக்க அதிகமான சமயத்தை எடுக்க வேண்டும். அது உள்ளத்தில் பதியும்வரை வாசிக்க வேண்டும். இவ்வாறு விடாமுயற்சியுடன் பயிற்சி செய்வதால் வசனத்தோடு நீங்கள் பழகி வசனம் உங்களில் கிரியை செய்ய ஆரம்பிக்கும். சில பகுதிகள் புரியாவிட்டால் அதைரியமடையாமல் தொடருங்கள். தைரியமாக தொடர்ந்து சமயம் எடுத்து வாசியுங்கள். அதே வசனமே தன்னை உங்களுக்கு விவரிக்கும். தாவீது இரவும் பகலும் வேதத்தை தியானித்து அதைப் புரிந்து கொண்டான்.

வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். வேத புத்தகத்தின் மிக நல்ல விளக்கம் வேத புத்தகமே. ஒரே குறிப்பில் மூன்று அல்லது நான்கு வேதபகுதிகளை எடுத்து ஒன்றோடொன்று தார தம்மியப்படுத்துங்கள். ஓரிடத்தில் சொல்லப்பட்ட வசனம் தெளிவாக்கப்பட்டு இன்னோரிடத்தில் சொல்லப்பட்ட வசனத்தின் மூலம் உறுதி செய்யப்படட்டும். இதுவே மிகவும் பாதுகாவலானதும் நன்மையானதுமான விளக்கம். தூய ஆவியால் இதனை எழுதியவர்களும் வேத வாக்கியங்கள் மூலம் போதிக்க இந்த முறையையே பயன்படுத்தினார்கள். இந்த முறை அதிக நேரத்தை எடுத்துக் கொள்வதாகச் சிலர் பராது கூறலாம். உங்கள் வேதனைகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். பரலோகம் செல்ல வேண்டுமெனில் வேதனைகளை சகிக்க வேண்டும். எனவே வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து பலன் பெறுங்கள்.

நான் முக்கியமாக வேண்டிக் கொள்ளுவது என்னவென்றால் உங்கள் வளர்ச்சி, வல்லமை, வாழ்வு போன்ற யாவும் தேவவசனத்துக்கு நேராக உங்கள் உத்தமத்தைச் சார்ந்திருக்கிறது. தேவ வசனத்தை நேசியுங்கள். இனிய தேனை விடவும், ஆயிரக்கணக்கான பொன் வெள்ளியை விடவும் அதனை கனப்படுத்துங்கள். பிதாவானவர் தமது வசனத்தின் மூலம் தமது இருதயத்தை உங்களுக்கு வெளிப்படுத்துவார். இயேசுவும் தம்மையும் தமது முழு கிருபைகளையும் நமக்கு வெளிப்படுத்துவார். தேவனுடைய சித்தத்தின்படி தூய ஆவியானவர் உங்களில் வந்து உங்கள் எண்ணங்களையும் இருதயத்தையும் புதிதாக்குவார். வேதத்தைப் படிப்பது ஒரு மிக முக்கியமான தொழிலாக உங்களுக்கு இருப்பதாக, அவரது வார்த்தையால் உங்களை நிரப்பி, அவரது சித்தத்தை உங்கள் மூலமாக நிறைவேற்றுவார்.

ஆண்டவராகிய தேவனே, உமது வசனத்தின் மூலம் நீர் எங்களோடு பேசுவது உமது பெரிய கிருபை. எனவே உமது வசனத்தின் மூலம் உமது இருதயத்திற்கும், சித்தத்திற்கு அன்புக்கும் உரியவர்களாகிறோம். உமது வசனத்திற்கு விரோதமாக எங்களில் காணப்படும் எல்லா பாவங்களையும் மன்னிப்பீராக. எங்களில் வாசம் பண்ணும் தூய ஆவியானவரால் புதிய வாழ்வு எங்களில் உறுதிப்படுவதாக. எனவே உமது விலையேறப்பெற்ற வேத வசனத்தில் நாங்கள் நிலைத்திருப்பதே எங்கள் விருப்பமாயிருக்கக் கிருபை செய்யும். ஆமென்.

கிறிஸ்துவின் நறுமணத்தை எடுத்துச் செல்வோம்

Bearing christ's fragrance

Lois J. Stucky (1928 - 2014)

நாம் அழைக்கப்பட்ட அழைப்பில் ஆசீர்வாதமாகவும், பயனுள்ளவர்களாகவும் வாழ நமது ஆண்டவரோடு உறுதியான உறவு வேண்டும். 'ரோஜாவின் நறுமணத்தை நுகர சமயம் எடுக்க வேண்டும்' என்று பழமொழி சொல்லுகிறது. வாழ்வின் நெருக்கடிகளிலிருந்து சற்று விலகி, தேவனுடைய தகுதியானதும் நன்மையானதுமான காரியங்களை கவனிக்க சமயம் செலவிடப்பட வேண்டும். அனேகர் இதனை உதாசீனம் பண்ணுகிறார்கள். இயேசு சாரோனின் ரோஜா. இந்த உலகின் ரோஜாக்களுக்கு மிகமிக மேலானவர். கருத்துள்ள உறவுடன் அவரைப் பின்பற்றி அவரது அறிவாகிய நறுமணத்தை உலகுக்கு எடுத்துச் செல்வோம். உலகத்திற்கு இன்று அதிக தேவையாயிருக்கிறது.

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

எழுப்புதலுக்காக இதய கதறல்

(7 மணி நேர உபவாச ஜெபம்)

இடம் : **St. John's Church**
Dharmanagaram, Sundankottai 628 703. Mobile : 94865 34137

நாள் : **11.02.2023,** *2-வது சனிக்கிழமை*

நேரம் : *காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை*

செய்தி : *சகோதரன்* **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** *குஜராத்*
IEM மிஷனெரிகள், *தமிழ்நாடு*

தொடர்பு : **வருகையின் தூதன்,** *மொபைல் : 95432 21008*

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். **வேத** புத்தகத்தின் மிக நல்ல விளக்கம் **வேத** புத்தகமே.

வேத வசனம் விதையாயிருக்கிறது. அது ஜீவனுடையது எனவே வளர்ந்து கனி தரக்கூடியது.

வேத புத்தகத்தை வாசிக்க அதிகமான சமயத்தை எடுக்க வேண்டும். அது உள்ளத்தில் பதியும்வரை வாசிக்க வேண்டும்.

இன்றும் தேவன் சபையைப் பார்த்து அது **ஜெபத்**திலும், வல்லமையிலும் குறைவுபட்டுக் கொண்டே போவதால் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்.

கிறிஸ்தவனின் மிகப்பெரிய தேவை இன்று அதிக அளவிலான **ஜெபம்**.

ஐந்து நிமிடமாவது உத்தமமாக **ஜெபிக்**காமல் நண்பர்களிடமும், குடும்ப அங்கத்தினருடனும் ஆலோசனை கேட்பது புத்தியீனமானது.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason